ஓலை 34 | ஓசை 128 | பிப்ரவரி 2023

# அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

ஆற்றலுடையவரின் ஆற்றலாவது பணிவுடன் நடத்தலாகும், அது சான்றோர் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றுகின்ற கருவியாகும்.

**Translation:**

Submission is the might of men of mighty acts; the sage
With that same weapon stills his foeman's rage.

**Explanation:**

Stooping (to inferiors) is the strength of those who can accomplish (an undertaking); and that is the weapon with which the great avert their foes.


/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

**நிர்வாக குழு**

## கு.செல்வமுத்துக்குமரன்

## சிவம் அறக்கட்டளை

**ஆசிரியர்கள்**

## அ.வில்சன்

## குமர.தர்மசீலன்

**வடிவமைப்பு**

## அ.வில்சன்

## அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,**

**மயிலாடுதுறை - 609001**


# அகர முதல இலக்கிய பேரவை


Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# உறுப்பு தானம்

இறைவன் தந்த அற்புத உயிரில்
விலை மதிக்க  முடியாத உறுப்புகள்
பல்வேறு பொறுப்புகளை
வெறுப்பின்றி வகிக்கின்றன
ஒவ்வொரு மனிதனுக்கும்  தனி உரிமை
போற்றிக் காப்பது மாந்தர் கடமை
கலராய் சட்டினி,
காலியாக்கும் கிட்டினியை
புகையை இழுத்து பகையைத் தேடாதே
நிதானத்தோடு  சென்றிடு, விபத்துகளை வென்றிடு
இரத்ததானம் செய்தே உயிர்களைக் காத்திடு
மூளைச்சாவு ஏற்பட்டால் உறுப்புகளை வழங்கிடு
சுயநலம் மிக்கவர் வாழும்போதே இறக்கின்றார்
பொதுநலன் காப்பவர்  இறந்தும் வாழ்கின்றார்
உறுப்புதானம் கொடுக்கும்  மனம் பெறுவோம்
இன்னுயிர் பலவற்றை இனிதே காப்போம்
மண்ணில் புதைத்து மாண்டு போகாமல்
கண்களையும் வழங்கு,ஆண்டு பார்க்கட்டும்



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# காதலர் தினம்

விண்மீன்போல் எண்ணங்கள் விரிந்திடுமே அலைக்கடல்மேல்
கண்ணான கணவனுமே கடல்மேலே செல்கையிலே
தண்ணிலவும் என்னைப்போல் தனிமையிலே தேய்ந்திடுதே
மண்மீதில் போராட்டம் மனத்திற்குள் தொடங்கிடுமே

காற்றிடமே காதலையும் கனிவாக தூதனுப்பி
ஏற்றிவைப்பேன் பாக்களையும் என்னவனின் நினைவினிலே
ஊற்றாக காதலதும் உள்ளத்தில் பெருக்கெடுக்க
வீற்றிருக்கும் தனிமையிடம் விளையாடிப் போவதென்ன

உன்நினைவில் எந்நாளும் உறைந்தேதான் கிடக்கின்றேன்
இன்பதுன்பம் அறியாமல் இரவுபகல் தெரியாமல்
மன்னவனே உன்னைமட்டும் மனத்திற்குள் ஏற்றிவைத்தேன்
கன்னலான நினைவுகளும் கண்முன்னே விரிந்திடுமே

பிரிவென்ற இடைவெளியும் பிரியாமல் இருப்பதென்ன
வரிவரியாய் வடித்தாலும் வலிகளதும் குறையலையே
பரிதவிக்கும் என்மனதை பாடலுமே சொல்லிடுமோ
கரைகின்றேன் கரைகின்றேன் காதலெனும் பிணியினிலே




கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# ஹைக்கூ

பள்ளி செல்கையில்
ஊஞ்சல் ஆடும் சிறுவன்
மரத்தில் புத்தகப்பை.

காய்ந்த குச்சியோ
தாமரை மொட்டோ
வந்தமரும் தும்பி.



அப்பாவின் தாலாட்டு
அழுகை தொடரும் மழலைக்கு
பச்சைத்துண்டில் பொம்மை.

முடி திருத்தகம்
மின்விசிறியை நிறுத்தியதும்
சமநிலையில் ஊசித்தும்பி

பள்ளிச்சிறுவன்
போட்டி போட்டு நடக்கிறான்
சிற்றோடைநீர் பனம்பழத்துடன்.

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# எறும்புகள்

யாருக்கும்
தெரியாமல்
தின்று வாய் துடைத்து
வரிசையாய் செல்கின்றன.



அந்த
'எறும்புகள்'

யாருக்கும்
தெரியாமல்
கலியாணம் பேசி
வெற்றிலை கைமாறி
கொண்டாடி மகிழ்கின்றன.

அந்த
'எறும்புகள்'

யாருக்கும்
தெரியாமல்
குழந்தை பிறப்பித்து
பெயர் சூட்டி
சட்டி பானை தொட்டு
சிரித்து மகிழ்கின்றன.

அந்த
'எறும்புகள்'

யாருக்கும்
தெரியாமல்
சடங்கு நடத்தி,
ஊர் கூட்டி
கை நனைத்துச் செல்கின்றன.



அந்த
'எறும்புகள்'

யாருக்கும்
தெரியாமல்
செத்து,
உடலை இழுத்து,
பாடைக் கட்டாமலே
செல்கின்றன.

அந்த
'எறும்புகள்'

யாருக்கு
தெரியும்
எவை
எது செய்கின்றயென.

கவிஞர் இராஜேஷ் சங்கரப்பிள்ளை

# பொதுவுடைமை!

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்.
இல்லாமை இல்லாத நிலை வேண்டும்.
நித்திய தரித்திரம் உழைப்போர்க்கு இங்கே.
எத்திசைச் செலினும் அத்திசைத் தந்திடுதே!

தொழிலாளிகளின் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கும்
முதலாளிகள் பதுக்கி வைக்கும் செல்வத்தை
ஏமாற்றாமல் உழைப்போர்க்கு ஊதியம் வழங்கினால்
ஏமமாய், நாட்டின் வளத்தைப் பெருக்கிடலாம்.

இயற்கை வழங்கும் நிரந்தரப் பொதுவுடைமை
இயற்கையின் எழிலார்ந்த மகரந்தச்சுழற்சி.
உலகப் பொதுமறை சுட்டுவதும் யாவர்க்கும்
நல் வாழ்க்கை தந்திடும் அறவழி வாழ்க்கையே!

உலகம் அனைத்தும் ஒரு குடும்பமாய்க்
கலந்து வாழ்ந்தாலே  உலகச் செல்வங்கள்
யாவும் யாவர்க்கும் பொதுவாகி இன்பந்தரும்.
யாதும் ஊரே,யாவரும் கேளிர்
உண்மை தானே!



கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

# நிகழ்காலம்

இருக்கின்ற காலத்தை
இறந்தகாலம் தீர்மானிக்கிறதா?
எதிர்காலத்தை தீர்மானிப்பதும்
இருக்கின்ற காலமென்றிருக்கிறாயா?
ஆக நினைத்ததும்
இருக்க விழைந்ததும்
இறந்தகாலத்தில் செத்துமடிய
இருக்கின்ற காலத்தில்
எதிர்காலப் பதிவேட்டில்
என்ன எழுதப் போகிறாய்?
இருக்கின்ற காலத்தில்
இறந்த காலத்தின் நிகழ்வுகளை
அர்த்தமற்று எண்ணிப்பார்ப்பதை
நிறுத்து.
எதிர்காலக் கனவை
இருக்கும் நிகழ்காலத்திலேயே தொலை
தொலைத்து விடு.
உன்னிலிருந்து அனுபவங்களைப் பிரி.
ஆக நினைத்ததையும்
இருக்க விழைந்ததையும்
பொய்க்கனவென்று அறி அழி.
எல்லாமும் அதுவதன் விருப்பப்படியே
நடக்கும் ஓடும் அமரும் படுக்கும்.
இருப்பதைக் கொண்டு இன்புற்றிருக்க
இருக்கும் காலம் போதும்.
என் இறந்த காலத்தில் எழுதப்பட்டதில்லை
இக்கவிதை.
என் எதிர்காலத்தில் எழுதப்போவதில்லை
இக்கவிதையை.
இதை நீ படிக்கும் காலமும்
இதை நான் எழுதிய காலமும்
ஒன்றே.
அது எப்போதும்
இருக்கின்ற நிகழ்காலம்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# சங்கே முழங்கு



போராட்டம் இல்லா வாழ்க்கை வேண்டிட
அமைதியான சூழல் உருவாக்கிட
வாழ்வில் சந்தோஷம் பொங்கிட
எண்ணங்கள் விரைவாக நிறைவேறிட
சூது வாதினை ஒழித்திட
நல்லதொரு சமுதாயம் மலர்ந்திட
படித்தவர் வேலை வாய்ப்பினை தேடிட
தமிழ் மொழி எங்கும் பரந்து செழித்திட
மானுட வாழ்வில் கவலை நீங்கிட
வரதட்சணை இல்லா சமூகம் உருவாக்கிட
பெண் வாழ்வில் ஏற்றம் பெற்றிட
உலகெங்கும் ஒரே கல்வி கொள்கை நிலவிட
வேற்றுமை நீங்கி ஒற்றுமை மலர்ந்திட
உண்மையை மறைக்காமல் உரக்க சொல்லிட
களவு இல்லா உலகத்தை உருவாக்கிட
தீயவராயினும் ஒதுக்காமல் அவர்களுக்கும் நன்மை செய்திட
வாழும் உலகில் இருக்கு வரை பிறர் நலனுக்காக போராடிட
முழங்குவோம் சங்கே முழங்கு என உரைத்திடுவோம்

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# சினிமாவும் நானும்




அன்பைக் கொட்டி
பாசம் பகிர்ந்து

அழுகையில் நனைந்து
துயரத்தில் குளித்து

நகைச்சுவையில் உறவாடி
தத்துவங்கள் பல பொழிந்து

கோபத்தில் கொப்பளித்து
ஆத்திரத்தில் அவசரப்பட்டு

சண்டைதனை சாதகமாய் இட்டு
சமாதானமாக சாந்தமாகி

புறஞ்சொல்லால் மனம் நொந்து
தன்னம்பிக்கையில் காலூன்றி

வெற்றி எனும் பூப்பந்தினை
ஒய்யாரமாய் தலையில் சூட்டிட

நவரசத்தையும் கலக்கி
நடுநிலைவாதியாய் உருமாறி நிற்க

சுற்றம் சொன்னது சினிமா
பாணியில் நடக்கிறாய் என்று

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# அக்கறை

அக்கறை என்றொரு சொல்லை அனுதினமும்
அக்கறையின்றி பயன்படுத்திக் கடந்து செல்கின்றோம்;
அக்கறை பட்டாலும் ஏனோசிலர் கொள்கிறார்
அலாதிகோபத்தை, ஏன்நீஎன்மீது அக்கறை கொள்கிறாயென!

ஒன்பதாம் வகுப்பு தமிழ்நூலில் "அக்கறை"யென்பது
ஒருகவிதையின் உன்னத தலைப்பு, அதனை
அடியேன் நடந்திடும் போதெல்லாம் கூடுதல்
அக்கறையுடன் நடத்திசொல்லியதுண் டக்கறையிலாமனி தருலகமிதுவென!

அக்கறை பாடலிலதன் கவிஞர் கல்யாண்ஜி
அக்கறையுடன் சொல்லுவார்சிந்திய தக்காளிகளைக் காணாதவராய்
அத்தக்காளி சிந்தியவர்மீ தக்கறையின்றி கடந்துசெல்வோரின்
அவசரகதி கண்டும் அக்கறையின்மை கண்டும்
சாலையில் நசுங்கிப்போனது தக்காளிகள் மட்டுமன்று
சகமனிதர்கள் மீதுநாம் காட்டவேண்டிய அக்கறையுமென்று!



நானுங்கூட இதற்கு விதிவிலக்காய் வாழ்ந்தேனில்லை;
நன்றாய் சிந்திக்கும்வேளை சாலையில்நான் வீழ்ந்தவேளை
சகமனிதர் ஓடிவந்து தூக்கிவிட்டு என்துயரை
சற்றேனும் குறைத்தது நினைவுக்கு வருகிறது!
சாலைவிபத்துகள் நடக்குமிடங்களில் உதாவது போவோருமுண்டு;
சாலைவிபத்தில் சிக்கியோர் கைப்பொருள் கடத்தி
கனிவிலா இதயத்தினராய்ச் சென்றோரும் உண்டுதானே!

துருக்கியில் சிரியாவில் பூகம்பம் என்றவுடன்
தொல்லுலகம் நன்றாயிருக்கக எண்ணுமடியேனின் இதயம்சிறிதும்
பதறவில்லை; பரிதாபம் கொள்ளவில்லை ஆயினுமெந்தன்
பாரதநாட்டின் விமானங்கள் வீரர்களுதவிப் பொருளோடு
பறந்ததுவறிந்து பூரித்தவென்னித யமதன்பின் அங்குநடப்பன
பார்த்துபதறியது அய்யோபாவம் அவர்களென அங்கலாய்த்தது!

இந்தியாவின் அக்கறைபெரிதென எண்ணுமதே வேளையிலே
இளையவுயிரைக் காக்கத்தன் இன்னுயிர்பற்றி கவலையின்றி
இடிப்பாடுகளில் சிக்கியவக்கா செய்தசெயலே "அக்கறை"யென்பேன்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# நாடகம்

திரைமறைவில் கைபொம்மையாய்
மந்திரக்கயிறு கொண்டு
நம்மை ஆட்டிவைக்கும் சூத்திரதாரி!
அதை மறந்து, அவனை மறந்து
மனிதன் ஆடும் ஆட்டம்!
வாழ்க்கை நாடகத்தில்
அரங்கேறும் விதவிதமான
கதாபாத்திரம்!
கல்லெறிந்த காக்கை கூட்டமாய்
காணாமல் போகும் மனித இனம்!
வாழ்க்கை நாடகம் முடிந்தவுடன்
கயிற்றை மேலேற்றி ஆண்டவன்!
கணக்கு தீர்க்கிறான்!
கைகொட்டி சிரிக்கிறான்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை-119

# மௌனப்போர்



முதல் உலகப்போர்
மற்றும்
இரண்டாம் உலகப்போரை விட
கொடுமையானது
உன் மௌனப்போர்.

கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்


# அன்பின் பெருந்தடத்தில்

தீ வரையப் பார்க்கிறாய்
நான் எழுந்து நிற்கிறேன்
சினத்தின் பற்களொடு.
கடவுளை ஆராதிக்கிறாய்
கும்பிடக் கூடாதென
கற்களை நீட்டுகிறேன்.
மௌனத்தில் தாலாட்டுகிறாய்
பறக்கும் தூசிகளென
சொற்களை வீசுகிறேன்.
பூ வரையப் பார்க்கிறாய்
வேர் விரிய விடாமல்
மழை காலடியில் கிடக்கிறது.
வான் அளக்க எழுகிறாய்
எனது அடைத்த கூண்டில்
பறவை இறகுதிர்க்கிறது.
வனமெனப் பூக்கும் ஆசைகளில்
செடி நட்டு பசுமையைத் தேடுகிறாய்
வெட்டிய கால்வாயை வாடவிடுகிறேன்.
உனக்கும் எனக்குமான புரிதலில்
நகரும் வாழ்க்கை
என்னையும் சுமக்கிறது
நதியின் கூழாங்கல் சுமந்த
உயிர்ப்போடு
உனதன்பின் பெருந்தடமென.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# பொன்னியின் செல்வன்




அதிசயத்து தான் போனேனய்யா
ஆறுகளும் குளங்களும் கடல் போல்
காட்சி அளிக்குமாம்

வந்தானய்யா வந்தியதேவனும்
காஞ்சியிலிருந்து கண்டானய்யா
தஞ்சையையும் பாழையறையையும்

பொன்னிநதிகரையில் தனக்கு ஏற்ற
பெண்ணவளையும் கண்டானய்யா
நமது முன்னோர்கள்
செல்வசெழிப்போடு இருந்த காலமய்யா

வந்தியதேவன் போனானய்யா
கடல் கடந்தும்
இலங்கையில் ஆதித்த கரிகாலன்
குந்தவையின் இளவலை
கண்டு மெய்மறந்தானய்யா.




சூழ்ச்சிகளும் பகைகளும் பல வந்தும்
அருள் மொழிக்கு
பக்கபலமாய் நின்றானய்யா.

ஆவதும் பெண்ணாலே
அழிவதும் பெண்ணாலே என்பதை
அறிய வைத்தார்களய்யா
நந்தினியும் குந்தவையும்

வானுயர கோபுரங்களை
நமது பாரதத்தில் கட்டினானய்யா
அருள்மொழிவர்மன்
ராஜராஜசோழனாய் ராஜ்ஜியத்தை
ஆண்டானய்யா.

குமரி முதல் இமயம் வரை
புலி கொடிதான் பறந்ததய்யா

கல்கியின் வாயிலாக நானும்
கற்றேனய்யா

பாமரனும் அறிந்து கொள்ள
படமாய் தான் எடுத்தார்களய்யா

வாசிக்க விரும்புபவர்கள்
இப்புதினத்தை வாசியுங்களய்யா

நம்முள்ளும் மறவனின் உதிரம்தான்
ஓடுகிறது என்பதை
அறியலாமேய்யா

கவிஞர் சுமதி தசதரன்,சென்னை

# கண் பேசும் மௌனமொழி

உன் கண்களையும்
என் கண்களையும்
தொடுக்கும் மெல்லிய நூலிழை வழியாகக்
கசிந்து கொண்டிருந்தது
மௌனம்.
காததூரங்கள்
கனாவனாந்தரங்களைக் கடந்து
காலம் துடித்துக் கொண்டிருந்தது
இதயங்களைக் கட்டிப்போட்டு விட்டு.
கடந்தகால
இருண்ட மேகங்கள்
ஒன்று திரண்டு
நெஞ்சவெளி மீது கூச்சலிட்டு
மழையைக்கொட்ட
உள்ளத்திலே வெள்ளச்சமர்.ஆயினும்
வெளியே நம் மௌனங்கள்
போட்டி போடவுமில்லை
ஏதேதோ பிதற்றவுமில்லை
சண்டையிடவுமில்லை
மெல்லிய நூலிழை வழிக்கசிந்த
மௌனங்கள் நமக்குள்
நதியாக உருவெடுத்து
ராட்சதக் குழம்பாக மாறிக்
கடலெனக் கொந்தளிக்கும்.
பின்
கூடடைந்த குருவிகளாய்
இருவருக்குமான ஞாபகங்கள்
அமைதியாகும் ரணங்கள்
பூசிய இருட்டில்
மௌனப் பூனைக்குட்டிகள்
இரண்டு சுருண்டுகொள்ள.
எதுவுமே மறந்து விடுவதற்கில்லை
வாழ்க்கையில்!



கவிஞர் மரு. ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# உழவர் திருநாள்!

உழவு மழை பருவம் பார்த்து
உழவர் கையில் உழவு குட்டையோடு
உழைத்து உயிர்கள் பசி தீர்க்கும்
உயர்ந்த தொழிலின் உரிமை மனிதமே
உம்மை உழவரென பட்டம் சூடிடும்
உன்னதமே உழவர் திருநாள்.



கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# பசி

இறைவா
பசியில்லா உனக்கு
பல உணவுகள்
படையல் படையலாய்
படைத்திருக்க
பசியுடன் நானோ
படையலைப் பெற
பல மணித்துளிகளாய்
கடைசி வரிசையில்
காத்து நிற்கிறேன்
கிடைக்கும் நம்பிக்கையில்



கவிஞர் தி.சரவணன்,சங்கரன்கோவில்

# எனது வகுப்பைப் பற்றி (2015–2021)

கல்லூரியில் எங்களது வகுப்பை விமர்சித்தவரும் உண்டு
வியப்பித்துப் பார்த்துவரும் உண்டு

பிரச்சினைகளின் போது எங்களுக்கிடையில் விமர்சனங்களும் இருந்தது,
விட்டுக் கொடுப்புக்களும் இருந்தது

காரணம் இல்லாம சண்டை போடுவோம்
காரணமே இல்லாம ஒன்னு சேருவோம்

பரீட்சை காலங்களில் பார்ப்பதற்கு பரபரப்பாக இருப்போம்
விடுமுறை காலங்களில் விளையாட்டுத் தனமாக இருப்போம்

களைக்கும் அளவிற்கு அதிகமா கதைப்போம்
நகைச்சுவையே இருக்காது ஆனாலும் சிரிப்போம்



எனது வகுப்பில் ஒவ்வொரு விதமாக இருக்கும்
சிலது தூங்கியே காலத்த கழிக்கும்
சிலது தின்னே தீர்க்கும்
சிலது சிரிச்சே சாகும்

கல்லூரியில் அடங்காதவர்கள் என்ற புகழ் பெயரும் எங்களுக்குண்டு
கற்பதில் அலட்சியம் இல்லாதவர்கள் என்ற புனைப் பெயரும் எங்களுக்குண்டு

காலம் போகப்போக கடந்த காலம் மறந்தாலும்
வகுப்பறையில் நடந்த கலவரங்கள் மறக்காது

கவிஞர் ஸனா தௌபீக்,முனைச்சேனை 04 கிண்ணியா

# திருநங்கை

இறைவனது படைப்பின் இயற்கைவிதி மீறல்!
ஆண்பால் பெண்பால் இணைந்திட்ட மூன்றாம்பால்
இய்யடியும் பிறப்புண்டென
இறைவனும் இயம்பினான் அர்த்தநாரியாக
அப்படியும் ஏற்கவில்லை இப்புவி
செல்வி திருமதியாக ஏற்கும் வையம்
செல்வன் திருநங்கையாக
அருவெறுப்பதேனோ?
எறும்புக்கும் படியளக்கும் ஈசனே
இரந்துண்கிறதே உன்அவதாரம்!
கைநீட்டி ஆதரிப்பாரில்லை
கையேந்தும் நிலை அவர்களுக்கு
மனிதம் இல்லா மாக்கள் வாழ
மரபணு மாற்றத்தார்
மரித்திடவும் வேண்டுமோ?
வழிகாட்டிடினும் வாழவிட்டிட
உரிமை பெற்று உயர்ந்திடுவரே!





கவிஞர் ஷீலாதேவி அருணாச்சலம்,நாகர்கோவில்

# அடுப்பிலிருந்து ஆகாயம்

வறுமையில் மலர்ந்த
வான்புகழ் திங்களே

மழலையில் உதிர்க்க
மானிடர் துணிந்திருக்க

மருவிப் பிழைத்ததே
மண்ணுலகில் நுழைந்தது

மாதவிடாய் துவக்கத்தில்
மணங்கோலம் கொண்டாயே

எட்டாக கல்வியை
எள்ளாய் இறைத்தாயே

அடுப்பூதும் பெண்ணுக்கு
அறிவொளி எதற்கு

ஆணவம் படைத்த
ஆணிற்கு நிகராய்

ஆகாயத்தில் உயர்ந்தாயே
அறிவொளியில் நிறைந்தாயே

குடும்பத்தின் ஒளியாய்
கல்வியில் மிளிர்தாயே



பாரதி கண்ட
புதுமையும் நீயே

புத்துயிர் தந்த
புகழ்மழை நீயே

பிரம்மனும் வியந்தான்
பிரபஞ்சத்தில் உன்னைக்கண்டு

திருமாலும் அளந்தான்
திருப்புகழின் நிலத்தை

சிவனும் முழித்தான்
சினத்தின் நிலைக்கண்டு

முத்தொழில் படைத்த
முத்துப் பெண்மையே

மூலோகம் காத்திருக்கு
மாதரின் நுன்வருகைக்கு

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# தேவதை அவன்

உழைப்பால் ஓய்ந்தனவோ
களைப்பால் ஓய்ந்தனவோ
எண்ண குழைவால் ஓய்ந்தனவோ
நிலை தவறிட ஓய்ந்தனவோ
சொல் தவறால் ஓய்ந்தனவோ
செயல் தவறால் ஓய்ந்தனவோ
எதிர்காலம் ஓய்த்ததுவோ
தன்மானம் ஓய்த்ததுவோ
கொடுத்த வாக்கு ஓய்த்ததுவோ
கொண்ட உறுதி ஓய்த்ததுவோ
இருண்ட நாட்கள் ஓய்த்ததுவோ
வரங்களை நிஜமாக்கும்
ஆண் தேவதையே ஓய்ந்திட்டதோ



கவிஞர் மஞ்சு,இலங்கை

# என் உறவுகள்

என் பாசம் எல்லாம்
வேஷம் என மாற்றப்பட்டது
உறவு எனும் ஏடுதனில்

பாசம் அதை
பணம் வாங்கிக் கொண்டது
பணம் என்னை
உறவை விட்டு
வெளியே தள்ளியது

வெப்பம் பட்ட பனிக்கட்டி
உருகித் தான் போய்விட்டது
அன்பு கொண்ட என்னுள்ளம்
அதில் மூழ்கித்தான்
மூச்சித்திணறி இறந்து போய்விட்டது

ஆயுள் முழுதும் தவமிருந்து
ஞானம் பெற்றான் முனிவன்
முப்பத்தி மூன்று
ஆண்டு வரை தவமிருந்து
நன்றி கெட்டவன் எனும்
நிலையடைந்தான் இவன்

ஆறறிவு கொண்ட
மிருகத்திடம் இல்லையே
அன்பினை அடைத்து வைக்கும் தாழ்



கவிஞர் ஹஸன் எம் பஜீத்,இலங்கை

# வலை விரிக்குது உணவு

எல்லா பெருநகரங்களின் வீதியிலும்
கட்டணமில்லாமல் காணக் கிடைக்கிறது!
உணவுப் பொட்டலங்களின் ஊர்வலம்!
கருக்கல் மாலை இரவு நடுநிசியென
நீள்கிறது நெடுகிலும் விதியின் தாண்டவம்!

முடிவில்லாப் பெரும் பயணம்!
தேடிக் கொண்டே இருக்கிறது
பசித்தவனை!
விதி முடிந்தவனை!
பாவம் இடத்தை விட்டு நகர முடியா
முடவர்கள்!

முன்பு கோவிலுக்கு முன்பாக வாசம்!
தற்சமயம் கவுரவமாக அடுக்கு மாடிகளில்!
பலநாட்களாய் உறுத்திக் கொண்டிருக்கும் கேள்வி?!
சமையலறை பூனை வாசமோ?

வலையை விரித்து காத்திருக்கிறது பிணி!
வாசல் வரை வந்து அனுமதி கேட்கிறது கேடு!
புயலும் பூகம்பமும் தேவையில்லை!
ஸோமோட்டோ ஸ்விக்கி போதும்!




கொன்று புதைக்க அல்ல உயிருடன்!
நரபலி நாள்தோறும் கோலகோலமாய்!
கோவிட் கொன்றது சொச்சம்!
கொலை கார துரித உணவே மிச்சம்!

எந்த வளமும் இல்லாத நாட்டில் சரி!
என்ன வளம் இல்லை இத்திரு நாட்டில்?
வாழ்வதற்காக உணவென மாறி!
சடுதியில் சாவதற்கென ஆகி?

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# தடைகளைத் தகர்த்திடுவோம்

உன்னையே நீ உற்றுப் பார்;
எதிர் இருப்பது எல்லாம்
ஒரு தடையல்ல,
உனக்கே உனக்கென
தடைகளை விதித்துக்
கொள்வது,
உன் எண்ணங்களே!
முன்னே ஒரு காலைத்
தூக்கி வைப்பதற்கு
முன்னரே, வெற்றியா
தோல்வியா என்ற
ஆராய்ந்திடுவது உன் மனமே!
உள்ளத்தில் ஒன்றை எண்ணி
செயலிலும் இறங்கிய பின்னும்
இன்னமும் செயலற்றவனாய்
நின்று கொண்டிருப்பது ஏனோ?
தூக்கி எறிந்திடுவோம்
உள்ளத் தடைகளை;
தகர்த்துக் கொளுத்திடுவோம்
சிந்தையைச் சிதைத்திடும்
தேவையற்ற வினாக்களை,
நமக்கான இலக்கினை மட்டும்
பார்வையில் பதித்து அதனை
நோக்கி முன்னேறிச் செல்!
அப்போது வானமும்
உந்தன் வசமாகிடும்!



கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# அது ஒரு திண்ணைக் காலம்

ஏதோ ஒரு
வழிப்போக்கன்
வந்தமர்ந்த இடம்

சில நேரம்
குருவிகள்
வருகை புரியும்
தானியக்கிடங்கு



பெரும்பாலும்
பாம்படப் பாட்டிகள்
தாயம் உருட்டும்
பரமபதம்

இராப்பொழுது
விழுங்கிய
நிலவொளி
கதைகளின்
பாடசாலை

நேரடி
அலை வரிசையில்
நாட்டு நடப்புகளின்
நாடகக் கூடம்

இப்போதெல்லாம்
காணவில்லை
அந்த
ஒன்றரை அடி
அதிசயத்தை

பசியாற்றும்
கம்மங்கூழ்
படுக்கையற்ற
ஓர் உறக்கம்

அது ஒரு திண்ணைக் காலம்

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# "குடி" மகனே!

பெற்றவள் துடிக்கின்றாள்
பெண்ணவளைக் காத்திட.

மங்கையொருத்தி மாண்டிடத் துடிக்கின்றாள்
மனிதமில்லா உன் செயலால்.

போதை தலைக்கேறிட அறிவை, தெறிவை
பேதை,பெதும்பை
பேரிளம் பெண் என்ற
பேதம் தெரியாது போகின்றது உனக்கு

மலராத மொட்டுக்களும்
மரித்துப் போகின்றது
மதியிழந்து கிடக்கும் உன்னால்

மதுவின் மடியிலும், புகையின் பிடியிலும்
மயங்கிக் கிடப்பதில் என்னதான்
மகிழ்ச்சி கிடைக்கின்றது உனக்கு



கள் குடிப்பதாலோ என்னவோ
கள்ளாகிப் போயிற்று உன் உள்ளம்

மாதுவை நாடவைக்கும்
மதுவும் வேண்டாம் உனக்கு

குடிமகனே
குடியைக் கெடுக்கும்
குடிகளும் வேண்டாம் உனக்கு
குடியை விட்டுவிடு
"குடி" மகனே.

கவிஞர் சனுபா தாஹிர்,இலங்கை

# பஞ்ச பூதங்கள்

இவ்வுலகில் உயிர்கள் வாழ ஐம்பெரும் தத்துவங்கள்
உள்ளடக்கிய இப்புவியின் ஆற்றல்கள் எண்ணில் அடங்கா.
சிவனின் ஐம்பெரும் தலங்களே பிரபஞ்சங்களே,
சிவபெருமானை வேதம், ஸ்வரமயம் என்று கூறுகின்றது.
நெருப்புக்கு உரிய ஸ்தலம் திருவண்ணாமலையே,
ஜோதிர் ஸ்வரூபமாக காட்சி தருகிறார் அருணாசலேஸ்வரர்,
மலையே சிவம், சிவமே மலையாக,
நீர் ஸ்தலமாக திருவானைக்கா இறைவன் ஜம்புலிங்கேஸ்வரர்,
என்றும் வற்றாத நீர் பிரயானகயாக,
மண்ணுக்கே உரிய ஸ்தலமாக காஞ்சியிலே
அருள் பாலித்து கொண்டிருக்கும் ஏகாம்பரநாதர்.
வாயுவின் ஸ்தலமாக காளஹஸ்தி இறைவன் காளதீஸ்வரர்.
காற்றின் அசைவிற்க்கேற்ப தீப ஒளி அசைய
ஆஹா! அற்புதமான ஜாலம்.
ஆகாய ஸ்தலமாக தில்லையிலே,
ஆடி, மக்களின் மனதிலேயேயும் நடனம்
ஆடிக் கொண்டிருக்கும், நடராஜ பெருமானின்,
அற்புதங்கள் கோடி கோடியானவையே!
நம் உடலின் தத்துவம் ஐம்பெரும்
சக்தியே, தென்னாடுடைய சிவன், எந்நாட்டவர்க்கும் இறைவனே!
நவக்கிரகங்கள் யாவும் ஈசனுக்குள்ளே அடங்கும்,
சிவராத்திரியில் எம்பெருமானை கண்
விழித்து விரதம் இருந்து தரிசிக்க
நம் பாவங்கள், சாபங்கள் அனைத்தும்
தவிடு பொடியாகி, உன்னத வாழ்வுதனை
அள்ளிப் பெருமிதம் கொள்ளலாமே!







**கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை**

# மீன்பிடி மாந்தர்கள்

மாணவன் கல்வி பயணத்தில் ,
வழி மாறினால் காவல்துறை சிறைச்சாலை!

மீனவன் கடல் பயணத்தில்
வழி மாறினால் கடற்படை சிறைச்சாலை!

மீனவனின் மனவிழியோ கடலை நோக்கி,
மனைவியின் காதல்விழியோ மீனவனைத்தேடி!

மீனதுவும் மீன்குஞ்சுக்கு
நீச்சல் சொல்லிக் கொடுப்பதில்லை!?
மீறிய பாசமுள்ள பெற்றோரும் பிள்ளைகளுக்கு
மீதமுள்ள தீயவழிக்கு துணை செல்கின்றனரே!

இறந்தும் இரையாகும் மீனதுவும் காய்ந்து
கருவாடு கப்பென்று சொல்லும் கனவான்களின்,
வார்த்தைகள் கூவத்தைவிட கப்பாக வெளிவிடுவது ஏனோ?

உயிர்விடவே உணவான புழுவை உண்டு,
உடனடியாக உணவுக்காக உயிரை விடும்
உயர்ந்த உயிர் மீனினம்தானே!



கவித்துவமாக கட்டழகியின்,
கண்அழகும் கயல்விழி தானே!

மீளாமாட்டோம் என்றறிந்தே,
மீண்டும் மீண்டும் மீன்வலையில் சிக்குகிறது,
சிதைந்தாலும் பிறர் மகிழ்வதற்காக!

கழுவுகிற மீனில் நழுவுகிற,
நாடாளும் நாகரிக எதிர்கட்சியின் ஜாமீன்கள்!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# ஏணி வாழ்வு

ஏத்தி விட்டோனை எத்தி விட எண்ணினும்,
ஏளனைப்பார்வை எனை உயிர் புகுந்து சுட்டினும்,
ஏன் இந்த ஏணி வாழ்வென எண்ணியதில்லை எந்நாளும்.

இளைய காலைப்பொழுதை
எதிர் பார்த்து வந்த சோலைக்கு
வெயிலின் ரணம், கொஞ்சம் கூடுதல் வலிதான்.

காலங்கள், காயங்கள் கடந்து தானோ?
மாற்றமும் வளர்ச்சியும்!

கற்கள், முட்கள் என்ன?
கண்ணாடி துகள்கள் என்ன?

பாதங்களை பதத்திடுனும்,
பயணங்களில் மாற்றமில்லாமல்.

பலனை எதிர்நோக்கா
பரிணாமப் பாதையில்
நடக்கப் பழகிக்கொண்டேன்
நானும் ஒருவளாக!



கவிஞர் மதுகை,திருச்சி

அகர முதல

# எனது உத்வேகம் நானே

முடியாத துயர்கள் முடியாத போதும்
முடித்திடவே அயர்வுகள் முடியுமே நாளும்

இரவாகி வாழ்வு இருள் ஆகினாலே
இரவின் பின்பு புலர்வு ஒன்றுண்டே

தலையிலே கையும் தேவை இல்லை
தலைகவிழ்ப்பும் எனக்கு இங்கில்லை

இன்னலை இன்பமாய் ஆளும் பக்குவம்
இதயத்தில் இரும்பாய் இலங்கிடும் தைரியம்

அன்பினால் அகிலத்தை செதுக்கிடும் பாங்கு
அறிவினால் அகங்களை அறிந்திடும் நோக்கு

புயலது அடித்தாலும் அசையாத நெஞ்சுரம்
பகைமையும் துஞ்சிடும் நேரான சொல்ச்சரம்

இத்தனை என்னுள் நான்கொண்ட வித்தையே
இத்துணை சக்தியும் என்னிடம் சித்தமே

மிஞ்சிடும் விவேகமே வேகத்தை என்றுமே
மின்னிடும் எனது உத்வேகம் நானே



கவிஞர் பஸ்லா பர்ஸான், காத்தான் குடி(இலங்கை)

# இயற்கை(யின்) சினம்

சீட்டுக்கட்டாய் சரிந்த மாடிகள்
யோசிக்க நேரமின்றி மடிந்த உயிர்கள்
உள்ளத்தின் உவமையாய் கண்ட வார்த்தைகள்
ஊரையே சுருட்டி வாய்க்குள் போட்டது

நிமிடத்தில் அனாதையான பணக்காரன்
நிழலும் உணவுமின்றி ஓலமிடும் அவலகுரல்கள்
அழக்கூட வழியின்றி மண்ணடியில் சிக்கிய மக்கள்
உடல்காயம் மனக்காயம் ரெண்டின் வலியில் ஓலங்கள்
ஏனிந்த கோபம் இயற்கை தேவியே?

வரம்பு மீறும் மானுடர்க்கு நரம்படி தண்டனையா?
உன் சிறு அசைவில் சிரியாவே சுடுகாடானது
சாவு சகஜம்தான்
ஆனால்,
இது அதிகம்தான்.



சாந்தம்கொள் தேவியே
சந்ததியை சாவுக்கு கொடுத்துவிட்டு
சந்தோசம் இங்குண்டோ
திருந்துவோம் மெல்ல
குலுங்காதே இனி கொல்ல

செய்வதறியாது வேடிக்கை மட்டும் பார்க்கும் நான்.

கவிஞர் சரவணன்.மு,மயிலாடுதுறை

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

# பறவைகளிடமும் பரிவு உள்ளதோ

கலைத்து விடப்பட்ட
மேகத்தில் சீறி பாய்ந்து
வருகிறது.
சின்னதொரு
பறவை சட்டென்று அடித்து
வீசப்பட்டது வான் வீதியில்.
மூச்சு இருக்கிறதா
என்று முந்தி கொண்டு வந்தது
தாய் பறவை.
மூச்சியின்றி கிடக்கும்
சின்ன பறவை சிதைத்தது.
யார்? என்று கடவுளிடம்
முறையிட்டது.
அதுவும் ஒரு சின்ன பறவை தான்
சீக்கிரம் வந்து விடும்.
என்னிடம் தான்
வேண்டாம் வேண்டாம்
தொண்டைக் குழியில்
சிக்கி வார்த்தைகளை
சீர்த்திருத்தியது.
சிக்கி கூண்டில் நாளை
ஒரு சின்ன பறவை.
வானில் பறக்கும்
விமானத்தை விட வேகமாய்.
வேகத் தடையை உடைத்தெறியும்
விவேகம்! சிதறிக் கிடக்கும்
தலை கவசத்தை தாண்டிய
உயிர் கவசம் குடித்து விட்டதே.
கம்சனின் வாகன கவசம்.
சிறியது சின்ன பறவையின்
கனவுகளும், ஆசைகளும்.
தாய் பறவையிடமே
ஒப்படைக்கப்பட்டது.

கவிஞர் ச.சத்தியபானு

# இரயில் ஸ்நேகமாய் வாழ்க்கை

நாம் பயணிக்கும் இந்த வாழ்க்கையில்
நாம் நினைப்பது ஒன்று
நடப்பது ஒன்று
நம் கைகளில் இருப்பதோ வேறு ஒன்று
என்னில் அடங்கா மனப் போராட்டங்கள்
மற்ற மனிதர்களின் பச்சோந்தி நிறங்கள்
நம் மனமோ நில் என்றால் நிற்காது
இதைச் செய் என்றால் செய்யாது
இதனை மாற்ற முற்படுகையில்
சில நாட்களுக்கு மட்டுமே முயற்சி
மீண்டும் பழைய குருடி
கதவைத் திறடி கதையாய்.
வாழ்க்கை என்னும் யுத்த களத்தில்
நித்தம் நித்தம் போராட்டமே
தீர்வுகள் இல்லா தள்ளாட்டமே
சேருமிடம் வரும் நாளில்
நிராயுத பாணியாய் நிற்கும்
ஆசைகள் மட்டுமே என்றும்
நம்முடன் கண் சிமிட்டியபடியே!



கவிஞர் சிவானி,சென்னை

# வாய்மை

(அதிகாரம் : 30)




யார்க்கும் எவ்வகையிலும்
தீங்கு பயக்காத.
சொற்களைப் பேசுதலே
வாய்மை எனப்படுவதாம்.

சூழ்நிலைக்கு நன்மைதரும்படி
சொல்லப்படும் பொய்களும்.
வாய்மையெனக் கருதப்பட்டு
நன்றெனக் கொள்ளப்படும்.

நெஞ்சிற்கு உண்மையென
அறிந்தும் பொய்யுரைத்தால்.
அந்நெஞ்சமே அவனை
வருத்திக் கொல்லும்.

நெஞ்சறிய பொய்யுரைக்காமல்
நேர்மையாய் நடப்போர்.
உலகத்தார் உள்ளங்களில்
வாழும் சிறப்படைவர்.

மனம்பொருந்திய உண்மையை
பேசும் ஒருவன்.
தவத்தோடு தானமுஞ்செய்யும்
சிறந்தோரிலும் சிறந்தோனாவான்.

வருந்தாத நலன்தரும்
பொய்யில்லா வாழ்வைவிட.
பெரியதொரு புகழ்நிலை
ஒருவனுக்கு வேறில்லை.

பொய்யாமை அறத்தை
பொய்யில்லாமல் செய்பவன்.
செய்யவேண்டிய பிறஅறங்கள்
செய்யாவிடினும் ஒன்றுமில்லை.

நீராடுவதால் புறந்தூய்மை
உண்டாகுமாப் போல்.
பொய்யாமை அறத்தினால்
அகத்தூய்மை உண்டாகும்.

புறவெளிச்சந்தரும் விளக்குகள்
நிஜவிளக்குகள் அல்லவே.
அகவெளிச்சந்தரும் வாய்மையே
மெய்யான விளக்கெனப்படும்.

உலகின் மெய்ப்பொருளாக
அறிந்தவற்றில் எல்லாம்.
வாய்மை ஒன்றையேயன்றி
வேறொன்றும் சிறந்தவையில்லையாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# மச்சங்கள் பேசும் மௌனம்

நின்றால்
நடந்தால்
நின் ஞாபகம்
தந்தியடிக்குதடி
கண்ணம்மா

தேடுதலே நம்மில்.

தேற்றுதலோ
போற்றுதலோ
வா!
விரல் பிடித்து
வாழ்ந்துவிட்டு
போவோமே.

உன்னுடன்
இருக்கும்
மனம்
உறங்கா
கவிதையடி

கருக்கலில்
சிறிது கலைந்து கிடப்போம்

கலைந்த நிறத்தோடு
கலையாத காவியமாகி
போகட்டும்

மச்சங்கள்
பேசும்
மவுனங்கள்
போதுமே
மிச்சங்கள்
எதற்கடி கண்ணே!



கவிஞர் ஆர்.மோகன்ராஜ்,சென்னை - 87

# தீரா இடும்பை தரும்

அன்பாக பழகி முதுகில் குத்திடுவதோ
அடுத்து பிறரால் உனக்கு குத்தப்படுமே
அழிக்க முடியாது நாவினால் சுட்ட வடுவே
அது சுடும் உன் வாழ்வையே

ஏமாற்றம் செய்துவிட்டாலே ஏமாற்றப்படுவாய் பிறராலே
ஏழையை ஏளனமாக பார்த்து விட்டாலே
ஏழையாக்கிடும் ஏழையின் கண்ணீர் துளிகளே
ஏளனமாக மாறும் உன் வாழ்வுமே

பொய் சொல்லி பணத்தை ஈட்டினாலுமே
பொறுக்காது இறைவன் கோபம் தானே
பொசுக்கிடுவான் உன் பணத்தை முற்றாகவே
பொசுங்கி சாம்பலாகிடும் உனது வாழ்வே



பெண் கற்பை சூறையாடி அனுபவித்தாலே
பெண் கண்ணீர் உன்னை கொல்லுமே
பெருமை கொண்டு நீ ஆடிவிட்டாலே
பெரும் தோல்வி உன்னை சூழுமே

புறம் பேசி நீ திரிந்தாலே
புறட்டிடும் உன் வாழ்க்கை அஸ்திவாரத்தையே
புன்னகையற்று கோபம் கொண்டு இருந்தாலே
புதைத்திடும் உன் வாழ்வின் மகிழ்ச்சியையே

பொறாமை கொண்டு அநியாயங்கள் செய்தாலே
பொக்கிஷமான வாழ்க்கையும் மங்கி போகிடுமே
பொக்கிஷமற்று உன் வாழ்க்கை பிதற்றுமே

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# கல்வியே செல்வம்

செல்வங்களுள் சிறந்தது
கல்விச் செல்வம்
உள்ளங்களுள் நிலைப்பது
பள்ளிப் பருவம்

பிறரால் தட்டிப்
பறித்திட முடியாத
கல்விக் கனியைப்
புசித்திடல் இனிமை

திருட்டுப் போகாத
உயர்ந்த பொக்கிசமாய்
தினமும் வாழ்வில்
திருப்பம் காட்டிடும்

வெள்ளம் மற்றும் வெந்தணலினால்
அழிக்காது
விடியல் வேட்கையை
வித்திட்டு வளர்த்திடும்



மனிதன் மனிதனாக
அவனியில் வாழ்ந்திட
கலங்கரை விளக்காய்
கரிசனை காட்டிடும்

உள்ளம் ஊன்றிக்
கற்றே நாலும்
கள்ளம் கபடம்
மறந்து வாழ்வோம்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

அகர முதல

# முழுமதி

கதைகளின் வழியே
அறிமுகமான அழகியே.
தூரத்திலிருந்தாலும்
ஓடினால் துரத்தி
நடந்தால் பின்தொடர்ந்து
முகில்களுக்குள் ஒழிந்து
கண்ணாமூச்சி ஆடி
மகிழ்வித்த தோழியே.
கவிதைக்கு அழகு சேர்த்தாயே.
ஆரூடம் உனை ஆண் என்றாலும்,
கவிஞர்களின் கற்பனையில்
உலா வரும் காதலியே.
தொட முடியா தூரத்தில் நீயிருந்தும்
என் பயணம் முடியும் வரை
துணை வரவேண்டும் தோழியே.



கவிஞர் சாந்தி,காங்கயம்

# திருக்குறிப்புத் தொண்ட நாயனார்

சிவன் அருள் புரியும் காஞ்சிமா நகர் எல்லா வளமும் உடையது
அவன் கருணையினால் வாழும் மக்கள் எல்லோரும் நல்லோரே
தவசிகளும் சிவனடியார்களும், சித்தர்களும் விளையாடும் பூமி
அவரவர் தங்கள் தொழில் முறைகளில் வழுவாது வாழும் நகரம் .

இவரே பாட்டுடைத் தலைவன் ஏகாலியர் குலத்தில் அவதரித்தார்
அவரவர் ஆடைகள் அழுக்கு நீக்கி சலவைசெய்து கொடுப்பார்
எவர் வரினும் அவர் குறிப்பறிந்து மனம் மகிழ சேவை செய்வார்
சிவனடியார்களுக்கு செய்யும் சேவை சிவத்தொண்டானது



அறிமுகமில்லா, யாராகினும் அவர் ஆடையை சுத்தம் செய்வார்
செறிவுடன் துவைத்து தும்பைப் பூவாக புத்தாடைபோல் தருவார்
வறியவர் துணியையும் துவைத்து திருநீறும் அமுதும் தருவார்
அறிஞர் சபையில் திருக்குறிப்புத தொண்டர் என்று அழைத்தனர்

மனிதகுலத்தின் புற அழுக்கை நீக்க போராடி வருபவர்
தனியாக வந்தாலும் கூட்டமாக வந்தாலும் ஓய்வின்றி உழைப்பார்
இனி ஒருவர் இப் பூமியில் இப்படி தொண்டராக வாழ்வது அரிது
கனி இருக்க காய் கவர்ந்தற்று மற்றவர் மனம் குளிர பேசுவார்.

இப்படிப்பட்ட ஒரு தொண்டரை சிவனுக்குப் பிடிக்காமல் போகுமா?
எப்படி குறிப்பறிந்து செயல்படுபவரை உலகம் அறியச் செய்வது?
சந்தடி இல்லாமல் கந்தலாடையுடன் சிவன் இவர் இல்லம் வந்தார்
கல்லடி படும் பைத்தியம் போல் குளிரில் உடல் நடுங்க நின்றார்

திருமேனியில் நீரும் கந்தல் ஆடையுடன் அடியாரைக் கண்டார்
கருமேக அழுக்குத் துணியுடன் இளைத்த மேனியில் இருந்தார்
வருமேனி அருந்தவரைக் கண்டு அவர் பாதம் பணிந்து தொழுதார்
"திருநீறுபோல் தங்கள் ஆடையைத் துவைத்துத் தருவேன்" என்றார்

"சூரியன் மறையுமுன் துவைத்து உலர்த்தித் தருவாயா?" வினவினார்
"மரியாதையுடன் தந்துவிடுவேன்" சிவன் மீது சத்தியம் செய்தார்
"பரிதாபமான என் மேனி குளிர் தாங்காது, வார்த்தை மாறக் கூடாது"
"சரியாகச் சொல்கிறேன் நம்புங்கள்" ஆடையை வாங்கிச் சென்றார்

ஆடையை வெள்ளாவியில் அவித்து துவைத்து அலசி எடுத்தார்.
வாடைக் காற்றுக் குளிரில் கரு மேகங்கள் சூழ மழை கொட்டியது
வேதனையில் மனம் வருந்தி, "இறைவா! இதென்ன பரீட்சை இன்று
சோதனையா எனக்கு வாக்கு பொய்க்கலாமா? வழி சொல்" என்றார்

ஓயாது பெய்த மழையில் உடல் நடுங்கும் அடியாருக்கு என்ன சொல்வது
காயாத வானம் இடைவிடாத மழையில் துணி பிழியப் பிழிய ஈரமானது
தீயாக சுடும் மனதுடன்,"வார்த்தை தவறிவிட்டேன்" நொந்து போனார்
வாயால் சொன்ன வாக்கு பொய்த்துவிட்டது இனி என்ன செய்வது.

"அடியாரின் திருமேனி குளிரில் வாடும் குற்றம் செய்துவிட்டேன்"
துடி துடித்தார் இதற்குமேலும் இந்த உயிர் வாழவேண்டுமா?
படித்துறை பாறையில் தன் தலை சிதறும்படி மோதினார்
பிடித்து தடுத்து,"என்னுடன் சிவலோகம் வா" அழைத்தார் சிவன்.

கவிஞர் ந.திருக்காமு,புதுவை

# கண்டதும் காதல்

நீ வரும் பாதை எப்போதும்
மலரோ பூக்கும் மனமோ வீசும்
நீ தரும் போதை அப்போது
உன் கண்ணில் வழியும்
என்னுள் நுழையும்

அது காதல் என்றாய் அப்போது
அதில் காமம் என்றேன் தப்பேது
கண்கள் பார்க்கும் மனதை ஈர்க்கும்
அந்த காதல் என்றும் தப்பாது.

வானில் தானே என்றும் வானவில் இருக்கும்
உன்னால் தானே எந்தன் வாழ்கை சிறக்கும்
நீ எப்போது வந்து என்னை மணமுடிக்க
அதுவரை ஏனோ எந்தன் மனம் தவிக்க



எப்போதும் நினைக்கும் உன்னை என் மனது
அப்போதும் மணக்கும் நீ தந்த மலரு
தப்பாமல் நான் உன்னை கரம் பிடிப்பேன்
தப்பி விட்டால் எந்தன் உயிர் துறப்பேன்

வெள்ளி நிலவும் வெட்கப்பட்டால் அழகு
வெற்றி முகத்தில் முத்தமிட்டால் அழகு
நட்சத்திரம் எல்லாம் சேர்ந்திருக்கும் இரவு
காதல்தானே நம்மை சேர்த்துவைக்கும் உறவு

எந்தன் மனதில் நீ கொக்கிபோட்டாய் முழுதா
உந்தன் அழகில் நான் சொக்கிவிட்டேன் அழகா
ஏறுதழுவ உள்ளதடா உன்னுடம்பில் வலுவு
விடியவிடிய என்னைக் கொஞ்சி தழுவு

கவிஞர் சு.வெற்றிவேல்,திருப்பூர்

# பாரதிகளின் காதல்

பாரதியின் கவிதையின்
பொருள் அறியாதவள்
செல்லம்மா

செல்லமாவின் மொழியில்
கவிதை இயற்றாதவன்
பாரதி

முரண்பாடுகளில்
காதல் வாழ்க்கை
வாழாமல் வாழும்
அக்கால பாரதியும்
இன்றைய பாரதியும்
காதல் பித்தர்கள்தான்

செல்லம்மாவும்
கண்ணம்மாவும்
கலந்த ஓவியங்கள்தான்
பாரதிகளுக்கு என்றும்
புரியாத புதிராகிறது!



கவிஞர் தமிழ்,மாயவரம்

# என் மனதை தொட்ட நிலா

எங்கும் எப்போதும்
காதலில் வெற்றியோ தோல்வியோ
நிலவையே ஈடாக வர்ணிப்பர்
கவிஞர்கள்.

அழகென்றால் நிலா
ஒளியென்றால் நிலா
அமைதியென்றால் நிலா
பெண்களென்றால் நிலா



வான் மகளின்
கறுப்பாடையில்
விண்மீன்கள்
ஜொலிக்க
நிலாவின்
வதனத்தைக் காண
கண் கோடி வேண்டும்.

முழு பௌர்ணமி யில்
ஏகாந்த பொழுதில்
கடற்கரை மணலில்
அமர்ந்து கடலன்னையையும்
நிலவு மகளையும் பாரீர்.

இதை எல்லாம் வரிகளில்
வடிக்க இயலாது

முற்றத்தில் நின்று அன்னாந்து
பார்த்தேன்; மூன்றாம் பிறையை.
ஆஹா! ஏது வார்த்தைகள்
அங்கே மௌன மொழி மட்டுமே

என் மனதை தொட்ட நிலா
எல்லோர் மனதிலும் முதல் இடம்
வகிக்கும் நிலா.

கவிஞர் சுமதி தசதரன்,சென்னை

# ஒரு நிமிடம்

நிமிடங்கள் பிரபஞ்சத்தில் முக்கியமான நிரல்
அண்டத்தில் வாழும் அனைத்து உயிர்களுக்கும்
நிமிடங்கள் என்பது அதன் வாழ்க்கையில்
மிக முக்கியமான குறிப்பு.

இதில் மனிதர்களின் வாழ்வில் பெரும் சுழற்சி
பிறப்பிற்கும் இறப்பிற்கும் நிமிடங்கள்தான் சான்றாகும்.



சோதனையிலும் சாதனையிலும்
அவன் அறிவை ஆராயும்
அந்த ஒரு நிமிடம் மிக முக்கியமானவை.

பொறுமையின் கூற்றுக்கு
அவர்களின் நிதானமே சான்றாகும்
அந்த ஒரு நிமிடத்திற்கு.

எதிலும் நிமிடங்கள்.

காலத்தின் போக்கில் நேரத்தை கணக்கிட்டு வாழும் நாம்
வாழ்வதும் வீழ்வதும் அந்த ஒரு நிமிடத்தில்.

பிரபஞ்சத்தின் சுழற்சியும் நிமிடத்தை நோக்கியே காலத்தில்
இதில் மனிதர்களின் மாண்பும் மாற்றமும்.

எதிர்பாராத வாழ்க்கைக்கு நிமிடங்கள்தான்
எதிர்பாராத சூழ்நிலைக்கும் நிமிடங்கள்தான்
எதிர்பாராத விபத்துக்கும் நிமிடங்கள்தான்
எதிர்பாராத வளர்ச்சிக்கும் நிமிடங்கள்தான்.

எதிர்பாராத வழி நிலைக்கும் நிமிடங்கள்தான்
எதிர்பாராத புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் நிமிடங்கள்தான்
எதிர்பாராத நன்மைக்கும் தீமைக்கும் நிமிடங்கள்தான்

இப்படி சூழல்களில்
ஒவ்வொரு மனிதனின் வாழ்வின் கூற்றுக்கும் நிமிடங்கள்தான்
நிமிடங்கள் மனித வாழ்வில் நிம்மதியின் பிழை.

காரணம்?
மனிதர்களின் பேராயுதம் நிமிடங்கள் தான்.

கவிஞர் ம.செல்லமுத்து,நாத்தப்பூர்

# காற்றின் குறும்பு

வாதை தீர்க்கும்
தேவதை யென்ற
உளறலில் நம்பிய
உள்ளம்

அழகை இரசிக்கும்
ஆவலில்
ஆற்றுநீர் ஆடியில்
முகம் தெளிக்கையில்



அவளை இரசிக்கும்
ஆவலில்
காற்றின் குறும்பு
நெளி மோதிரமாக்கி
நிழல் கலைக்கும்

நிழலுக்கும்
கற்பனைக்கும்
நடுவில்
சிக்கிய மனம்

தன் பொழுது
தவற விட்டதென்னவோ
தனி கதை.

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை


# அன்பென்ற மன்றத்தில்

நெஞ்சள்ளி போகும்
நினைவுகள்
ரோஜாக்கள் கொடுக்காமல்
பூத்தது ரோஜாவின் வண்ணமாய்
காதல் மணம்

வாடாத பார்வையில்
பூக்கும் ஓசையில்
மனம் உணர்ந்த மணம்

தினங்கள் கடந்து போகையில்
முகம் பூசும் செம்மையில்
அசைபோடும் அர்த்தங்கள்

ஆயிரமாயிரம் எண்ணங்கள்
பொன்னொளி வீசிடும்
வந்தாடும் வண்ணத்தில்
சிறைபடும் சில்லென்றே



சிரிப்பே பேசுமொழியாகி
பிரியாத வரம் வேண்டும்
பின்னிய பிணக்குகள் பினங்கி
மறையும்

புதுமலராய் காதல் தினமும்
மலரும்
கைத்தலம் பற்றிட கனாக்கள்
நூறு
மெய்யன்பில் மெழுகின் உருகல்

அன்புகயிற்றால் கட்டி
அணைத்திடும் உள்ளம்

மாட்டிக்கொண்ட மனங்கள்
பூட்டிக்கொண்டன
அன்பென்ற மன்றத்தில்
காதல் ரோஜாக்கள்

கவிஞர் சுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# தொடுவானம் தூரமில்லை

தொடுவானம் தூரமில்லை நின்று தொட்டிடுவோம் எட்டியே
சோம்பலையும் சோதனையையும் அடித்து நொறுக்கிடுவோம் விரட்டியே

சாதிக்க துடிப்பவனுக்கு எதையும் போதிக்க தேவையில்லை
முடியும் என உறுதி கொண்டால் முடிவுகளின் தோல்வியில்லை

கனவுகளை வளர்த்து கொண்டு கண்ணியமாய் நாம் வாழ்ந்தால்
சங்கடங்கள் விலகி ஓடும் சந்தோசம் நிலைத்துவிடும்

இல்லாத ஒன்றை நினைத்து ஏங்கி வாழ்வதை விட
இருப்பதை சிறப்பாக்கி விரித்திடுவோம் சிறகினை

சாக்கு போக்கு சொல்லாதே சாஸ்திரத்தில் மூழ்காதே
ராசி பலனை நினைத்து உழைப்பதை நிறுத்தாதே

திட்டங்களை வகுத்திடு அதற்கு தினந்தோறும் உழைத்திடு
தானாக நடந்திடும் என்ற தரித்திரத்தை கலைந்திடு

வகுத்து கொண்ட பாதையிலே மனதை வடம்பிடித்து இழுத்து செல்
தோல்வியே வந்தாலும் தடம் மாறாமல் துணிந்து நில்



ஆகாயம் தூரமென்று அவநம்பிக்கை கொள்ளாதே
அதிஷ்டம் வெற்றி தரும் என்று அற்பமாய் நம்பாதே

வாய்ப்புகளை தவறவிட்டு வாழ்க்கையை தள்ளாதே
பின் வென்றவனை பார்த்தே வாய்பிளந்து நில்லாதே

உனக்கான வாழ்வினை உருவாக்க முனைந்திடு
உலகமே எதிர்த்தாலும் போராட துணிந்திடு

எடுத்துக் கொண்ட முயற்சியே கொடுத்துவிடும் வெற்றியை
தீரமாக நாம் இருந்தால் தொட்டிடலாம் விண்ணையே

தன்னம்பிக்கை கொண்டு தரணியில் நின்றிடுவோம்
முடியதை செயலையெல்லாம் முடித்து வென்றிடுவோம்

கவிஞர் ஜெ.சிவக்குமார் ஜெயபாலன்,அருளவாடி

# வாசகி

ஆளரவம் அற்ற
அந்திவேளை ஒன்றில்
கூடு திரும்பும் கூட்டுப்பறவைகளின்
குரலொலிகள்
ஓங்கி ஒலிக்க
புல்லரிக்கச் செய்யும்
தென்றல் காற்று ரீங்காரமிட்டு
இன்னும் அடர்த்தியாக்கிய
தனிமை ஒன்றில்
நான் வாசிக்கும் கவிதை நீ.



கவிஞர் கீர்த்தனா பு,பாரதியார் பல்கலைக்கழகம்,பெருந்துறை ஈரோடு

# தாய் பறவை

அந்தி சாய்ந்த இருட்டில்
மரக்கிளையிலிருக்கும் பறவைக்கு
சற்றுநேரத்தில் விழுந்திடும் துளிகளை
இடிச்சத்தமும் மின்னலோடு வீசிய காற்றும்
அச்சமூட்டிட

வீசும் காற்றில் கிளைகளும் முறிந்து விழுந்திட
கட்டியகூடும் சிதைந்திடுமோவென
பதறிய நொடியில்
விழுந்த துளிகளில் நனையும் பறவை



இறகுகள் முளைத்திடாமலிருக்கும்
குஞ்சுகளை காப்பதே முக்கியமென
விடும்மூச்சு காற்றின் வெதுவெதுப்பில்
குஞ்சுகளை அணைத்து

குடையென கொட்டும் மழையில்
நனையும் சிறகுகினை விரித்து

அசைந்திடும் கிளையில் சிலையெனவிருக்கும்
தாய்ப்பறவையை காணும்போது
முன்னொரு நாளில்
அம்மாவும் சேலைக்குள் மறைத்தது - என்
மனதினை நனைக்கிறது..

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# காதலின் வலிமை

காதலின் வலிமையால்
வலுவிழந்து போகிறது.
அநேகமான
பெற்றோரின்
வலிமையான மனது.



கவிஞர் சா.நாகூர் பிச்சை,திண்டுக்கல்

# தேரோடும் வீதியிலே

நடந்தே காவடி எடுத்து வந்த கோயிலில்
இப்பொழுது கார்களும், இரு சக்கர வாகனமாய்
நிரம்பியிருந்தது

தைமாத தேர்காலத்தில் கடைகளின் ஆக்கிரமிப்பில்
சாமியே சிறிது பாதிக்கப்பட்டிருந்தது

அஞ்சுக்கும்,பத்துக்கும் விற்பனையாகிக் கொண்டிருந்த
குச்சி, தேன் மிட்டாய்கள் இப்போது
முப்பது, நாற்பது ரூபாய் என மாறியிருந்தது

கட்டுக்கடங்காத கூட்டம் கூடும் கோயிலில்,
திருவிழாவில் சாமி மட்டுமே பழையது
கட்டணமே எல்லாவற்றிற்கும் பேசியது

முன்பு இலவசமாக மோர் பந்தல் வைத்திருந்த இடத்தில்
இப்பொழுது கலர் சோடா,லெமன் ஜூஸ் என்ன
காசுக் கொடுத்து வாங்கும்படி கடைகளாய் மாறி இருந்தது

கந்தன் பாதம் கனவிலும் காக்கும்
என்ற வரிகள் மறந்து
கண்காணிப்புக் காமிராக்கள்
பொருத்தப்பட்டுள்ளது என்று
எழுதப்பட்டுள்ளது



அரோகரா கோஷத்தை விட
திருடர்ககளைப் பற்றிய
காவல் துறையின்
எச்சரிப்புக் குரலே
ஓங்கியிருந்தது

விழித்திருந்து திருவிழாக் கொண்டாடியக்
காலம் போய்,
தங்களிடம் உள்ள பணம் காலியாகும் வரை மட்டுமே மக்கள்
திருவிழாவில் இருந்தனர்.

கவிஞர் இரா.மதிராஜ்,அலப்பட்சக் கவுண்டன் புதூர்

# அடுப்படியில் இருந்து ஆகாயம் நோக்கி

மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திட்டாய் நங்கை நீயே அம்மா
கள்ளிப்பால் புகட்டிய காலம் நீங்கி
கல்விப்பால் அளிக்கும் ஞாலம் இதுவே
பெண்ணே நூலை எடுத்திடு கையில்
அறிவே உன்னைக் காத்திடும் ஆயுதம்
வானவில்லுக்கும்வண்ணம் தீட்டு பெண்மயிலே
முயன்றால் வானம் வந்திடும் அண்மையிலே
மண்ணில் இருந்து விண்ணைத் தொடவே
அடிமைத் தனத்தையும் மடமைக் குணத்தையும்
களைகளாய் பிடுங்கி சிகரம் ஏறு
கொண்டிடு நித்தம் புதிய வீறு
உலை வைத்து சோறாக்கிய கரங்கள்
அணுஉலையில் பணிபுரியும் தரம் பெற்றது
அம்மி அரைத்து சமைத்த மாதரினம்
ஞாயிறு, திங்கள், செவ்வாயில் புதுவெள்ளியாய்
ஏவுகணை மீதேறி ஆகாயத்தை அளக்குது
வெல்லப் பிறந்த செல்லக் கிளிகளே



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# பிரிவினை என்பது கிடையாது

காதலர் தினத்தை
இங்கே கண்டேன்
காதல் என்றால்
இதுதான் காதல்
இந்த வயதிலும்
நல்மகிழ்வை பார்க்கிறேன்
உங்களது
காந்த சிரிப்பிலே
என் கவிதையில் படிக்கிறேன்



நெருக்கம் இறுக்கம்தரும் காட்சி
உருகும் நெஞ்சினை
மகிழ் செய்யவே
மறுபிறவியிலும் நாம்
இருப்போம் இப்படியே
மாறாது நம் காதல்
இந்த உலகிலே

இன்று உள்ள இளைஞர்களே நீங்கள்
நன்றாய் எங்களைப் பாருங்களேன்
என் மனம் அவளுக்கு அடிமை
அவள் மனம் எனக்கு அடிமை
எங்கள் வாழ்வின் இல்லை என்றும் பிரிவினை

புரியாமல் ஒருவரை ஒருவர் அறியாமல்
சரிஇல்லா வாழ்க்கையை வாழ்கின்றீர்
பிரிவினையை கேட்டு நிற்கின்றீர்கள்
பிரிவதுதான் வாழ்க்கையா என நினைத்துப்பாருங்கள்

வாழ்க்கை என்பது சூதாட்டம் அல்ல
வாழ்க்கை என்பது தேரோட்டம்
போராடி இழுத்து வந்தால்தான் நிலைக்கு வரும்
போர் அடித்த நெல்தான் மூட்டைக்கு வரும்

வாழ்க்கை என்பது வாழ்வதற்கு நீ
வாழும் வாழ்க்கை அனுபவிப்பதற்கு
விட்டுக்கொடுத்து வாழ்ந்து பாரு
கெட்டுப்போகாது இருவர் பேரும்

கவிஞர் அஞ்சல் தஞ்சைதாசன்,மடிப்பாக்கம் 91

# ஏழ்மையின் விம்பம்

வறுமை பெருநெருப்பு
வாட்டிச் சுடுமே
கருவை விட்டு
கனவோடு வந்தாலும்

வெறுமை துரத்தும்
வெளிச்சம் இல்லாதே
அரும்புகள் சிதையும்
ஆசைகள் கலைந்து



விரும்பி வாழாத
விரக்தியே கிடைக்கும்
பருகி உண்டிட
பானமும் இல்லையே

உருக்குலையும் உலகில்
உலைக்கரிசி இல்லையே
தெருக்கோடி எங்கும்
தென்னங்கீற்றுகளாய் குழந்தைகளே

வறுத்தும் நிலையில்
வாடித் திரிகிறதே
வெறுத்திடும் வாழ்க்கை
வேதனையும் கொடுக்குதே

கருத்திட்டுப் பலர்பேசுவார்
கதைக்காக மட்டுமே
குறுகும் குழந்தைகளின்
குறையினைத் தீர்ப்பாரோ.

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# தை கோலம்!

வஞ்சியின் வண்ணக் கோலம் கண்டிட
வண்ண மயில் வந்தது
நீல வண்ண தோகை விரித்தாடியே!

தை பொங்கல்!

ஓர விழிப் பார்வையில்
ஈரம் சிந்திடும் பாவையின்
சூரிய பொங்கல்
முக்கனியின் சுவையாய் தித்திக்கிறதே!



கவிஞர் சுந்தரகுமார் கோவிந்தசாமி

# அன்புள்ள அம்மாவிற்கு

பழத்திலுள்ள விதை போல பத்து மாதம் எனை பாதுகாப்பாய்
உன் கருவறையினுள் தாங்கி பெற்றெடுத்தாயே அம்மா
உன் பசி பாராது இரத்தத்தை பாலாக்கி
என் பசி தீர்த்து மனங் குளிர்ந்தாயே அம்மா

நான் விழிக்கும் பொழுதெல்லாம் நீயும் விழித்து
உன் தூக்கமதை தியாகம் எனக்காக தியாகம் செய்தாயே அம்மா
தந்தையின்றி இத்தரணியில் தவழ்ந்திட்ட போது
தாயுமாக தந்தையுமாக
எல்லாமுமாக நீயே திகழ்ந்தாயே அம்மா

சிறு காயம் என் உடலில் நீ கண்டாலும்
மருத்துவச்சியாய் மாறி அக்கணமே
என்னை தாங்கிக் கொள்வாயே அம்மா

இவ்வுலகை அறிமுகம் செய்து நல்லது கெட்டதை
பிரித்தறிவித்தாயே
நன்னெறி போதித்து என்னை உயர்வடைச் செய்தாயே அம்மா



என்னை நேசிக்கும் எல்லோரின் அன்பும் பொய்யாகிப் போனதே
உன் அன்பு மட்டும் பொய்யாக முடியாதே அம்மா
குயிலுக்கு தெரியும் அதன் குரல்தான் இனிமையென்று
எனக்குத் தெரியும் உன் அன்புதான் உயர்வென்று அம்மா

பூக்கள் நிறைந்த மெத்தை போன்ற என் இதயமிது
அதில் நீ என்றும் பட்டாம் பூச்சியாய் குடியிருப்பாயே அம்மா
என் உடம்பில் உயிர் உள்ள வரை உன்னை தாங்கி
கண்ணுக்குள் மையாக உன்னை பாதுகாப்பேன் அம்மா

நான் அதிகம் அன்பு வைத்தது உன்மேல்தான்
உன்னை அதிகம் தேட வைத்ததும் நீ
என் மீது வைத்த அன்புதானே அம்மா

நீர் இன்றி ஒரு மணித்துளியாவது இருந்திடலாம்
நீ இன்றி ஒரு கணமேனும் இவ்வுலகில் இருக்க முடியாதே அம்மா
இந்த உலகம் சுழலும்வரை என் கண்ணுக்குள் நீயும்
உன் இதயமதில் நானும் வசித்திட ஆசை அம்மா

என்றும் உன் அன்பின் மகள்

கவிஞர் எனோலா ஹொல்மெஸ்,இலங்கை (வியாங்கல்லை)

# காஞ்சி காமகோடிபீட 70தாவது பீடாதிபதி

பூர்வீகம் தண்டலமே! ஜன்மதானம் ஆரணியே!
தொட்டிலிலே இட்டதுவும் நாமகரணம் செய்ததுவும்
நற்றாயின் தமக்கைதன் இல்லத்தே! மாண்தந்தை
கிருஷ்ணமூர்த்தி ஸாஸ்திரியே! ஈன்றவன்னை தன்பேரோ
அம்பாலக்ஷ் மிசீர்மாது! எட்டாவது சேயிவரே!
சகோதரர்கள் சகோதரிகள் உடன்பிறந்த சீர்த்தியரே!
சீர்" சங்கர நாராயணப்" பேரிட்டார் பெற்றோரே!
தந்தையார் பணியாற்றிய வேதபாட சாலைதனில்
ரிக்வேதம் கற்றாரே! இவர்தவிர்த்த மற்றவர்கள்
ஆரணியில் உயர்நிலைபள் ளியதனிலே கற்றனரே!
பெரியதந்தை பணிபுரிந்தார் அவ்விடத்தே! அன்னவர்தாம்
ஜனித்தயிடம் வேதபாட ஸாலைகாண் விழைவாலே
மூவரையும் காண்குழுவில் என்றனையும் ஏற்றனரே!
அம்முயற்சி எதிர்பார்த்த முழுதளவு எட்டவில்லை!
என்றாலும் ஓரளவு செயல்வடிவம் பெற்றுளது!
மேன்மேலும் முன்னேற்றம் கண்டிடவே வேண்டுவமே!
ஜெயேந்திரர் தேர்ந்திவரை சந்திரசே கரிசைவினை
பெற்றாரே! பீடாதி பதியானதும் " சந்திரசே
கரதசகம்" யாத்தவர்தம் திருமுன்னே ஸமர்ப்பித்தார்!
தாய்மொழியோ தெலுங்கெனினும் ஸமஸ்கிருதம் ஹிந்திகன்னடம்
தமிழ்ஆங்கிலம் ஆறினிலும் புலமையரே! ஐம்பத்தைந்
தாம்ஜெயந்தி விழாக்காணும் சீர்த்தியரே! சமயத்தை
சனாதநத்தை நேர்காத்து சைவப்பணியும் சமுதாயத்
தொண்டதுவும் ஆற்றுகின்றார்! மாண் "சங்கர விஜயேந்திர
ஸரஸ்வதிப்பேர்" சூட்டினரே! தாமிரபர ணிகாவேரி
புஷ்கரங்கள் தொடர்ந்தாரே! கற்றவற்றை மனத்திருத்தி
எடுத்துரைக்க வல்லவரே! நாட்டினது வடக்குதெற்கு
கிழக்குமேற்கு எல்லாமும் யாத்திரையும் முகாமுமென
தொய்வில்லா பயணத்தால் தொடர்தொண்டு ஆற்றுகின்றார்!
ஈச்சுரனார் நல்லருளால் சிவத்தொண்டால் வாழியரே!



**கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)**

# கண்ணிலே நீர் எதற்கு?

சின்னஞ்சிறு பிள்ளைகளின் தனித்திறனைக் காண்கையிலே
என்னையும் அறியாமல் கண்களில் நீர்வழியும்!
தனக்கென ஏதுமின்றி தவித்திருப்போர் உள்ளத்தில்
எண்ணம் உண்டு பிறர்க்குதவ என்றறிந்தால் நீர்வழியும்!
தன்னலமின்றி தாய்நாட்டின் நலம் விழைந்த
உன்னதமான தலைவர்களின் வாழ்க்கை வரலாறோ
வாசிப்போர் கண்களில் வரவழைக்கும் கண்ணீரை!
கண்ணிருந்தும் குருடராய் வாழ்ந்திருப்போர் பலபேர்கள்!
கண்ணிழந்த மனிதர்களிடம் எண்ணற்ற திறமைகள்!
என்னநாம் சாதித்தோம் என்றெண்ணிப் பார்க்கையிலே
ஒன்றுமே இல்லையென உணர்கையில் நீர்வடியும்!
பிள்ளைகள் தம்மீது அன்பின்றி வாழ்ந்தாலும்,
உள்ளத்தில் அவர்கள் நலமுடன் வாழ்கவென்று
நாளும் வாழ்த்துகின்ற பெற்றோர்கள் செயல்கண்டு
கல்நெஞ்சம் படைத்தோர்க்கும் கண்ணீர் கசிந்துவரும்!
அன்புகாட்டி வளர்க்கும் விலங்குகள் நம்மிடத்தில்
நன்றி காட்டும்போது ஆனந்தக்கண்ணீர் வரும்!
உண்மை நண்பன் துன்பத்தில் உடனிருந்தால்
தன்னை யறியாமல் கண்ணீர்த் துளி பெருகும்!
தாய்நாட்டைக் காக்க எல்லையிலே போராடி
தன்னுயிரை ஈந்திட்ட வீரர்களின் தியாகத்தை
நினைவு கூர்கையிலே நிச்சயம் கண்ணீர்வரும்!
இயற்கையின் சீற்றத்தால், ஓயாத போர்களினால்
மாய்கின்றார் மக்களெலாம்! அப்பாவி மக்கள்
துயருறும் நிலைகாண பெருகிடுமே கண்ணீரும்!
இவையெல்லாம் தாண்டி மனிதனுக்கு மனிதன்
இழைக்கின்ற கொடுமைகளை, அவலங்களை
அன்றாடச் செய்திகளில் நித்தமும் அறிகின்றோம் !
மனிதக் கழிவுகளை குடிநீரில் கலப்பதுவும்
தண்ணீர் தொட்டியினில் இறந்தநாய் கிடப்பதுவும்
திருந்தாத உள்ளங்கள் இருப்பதைக் காட்டிடுதே!
இந்நிலையை அனுபவிக்கும் மனிதர்களின் இடத்தினிலே
தன்னை வைத்து தவறு செய்தோர் பார்த்தாலே
இந்நிலை மாறிவிடும்! இன்பத்தில் கண்ணீர்வரும்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# ஜி.யு.போப்–ஜீயார்ஜ் யூக்ளோ

(24 ஏப்ரல் 1820 - 11 பெப்ரவரி 1908 (அகவை 87)

(கட்டுரை)

## சிறப்பு



ஜி. யு. போப் (George Uglow Pope, ஏப்ரல் 24, 1820 - பெப்ரவரி 11, 1908) கனடாவில் பிறந்து கிறிஸ்தவ சமய போதகராகத் தமிழ் நாட்டிற்கு வந்து 40 ஆண்டு காலம் தமிழுக்குச் சேவை செய்தவர். திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்.

## வாழ்க்கைச் சுருக்கம்

கனடாவின் பிரின்ஸ் எட்வெர்ட் தீவில் ஜான் போப், காதரீன் யூக்ளோ போப் ஆகியோருக்குப் பிறந்தார் போப். ஜீயார்ஜ் யூக்ளோ என்பது போப்பின் இயற்பெயர்.தந்தையாரின் வாணிபத்திற்காக எட்வர்ட் தீவு சென்றிருந்த குடும்பம், போப்பின் குழந்தைப் பருவத்திலேயே 1826-ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குக் குடும்பத்துடன் திரும்பியது.19 வயது வரை ஹாக்ஸ்டன் கல்லூரியில் கல்வி பயின்றார்.

இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார். 1886-ஆம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். புறப்பொருள்வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களைப் பதிப்பித்தார். தமிழ் மீது பெரும்பற்று கொண்ட இவர் நாலடியார், திருவாசகம் ஆகியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

# ஜி.யு.போப்-ஜியார்ஜ் யூக்ளோ

(24 ஏப்ரல் 1820 - 11 பெப்ரவரி 1908 (அகவை 87)

(கட்டுரை)

## தமிழ்நாட்டிற்கு வருகை

விவிலிய நூற்கழகத்தைச் சேர்ந்து சமயப்பணி புரிவதற்காக 1839-இல் தமிழ் நாட்டிற்கு வந்தார். கப்பலில் பயணம் செய்த எட்டு மாதங்களிலேயே தமிழை நன்கு கற்றார்.

சென்னைக்கு வந்த போப் சாந்தோம் பகுதியில் தங்கினார். வெஸ்லியன் சங்கம் சார்பாகச் சென்னை வந்த போப், சென்னையில் இங்கிலாந்து திருச்சபையில் சேர்ந்தார். அங்குக் 'குரு' பட்டம் பெற்றார். எஸ். பி. ஜி எனும் நற்செய்திக் கழகத்தின் தொண்டராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அச்சங்கத்தால் சாயர்புரம் சிற்றூருக்குச் சமயத்தொண்டுக்காக அனுப்பி வைக்கப்பட்டார்.

## சாயர்புரத்தில்

தூத்துக்குடிக்கு அருகே உள்ள சாயர்புரத்தில் தங்கியிருந்த அவர் ஆரியங்காவுப் பிள்ளை , இராமானுசக் கவிராயரிடத்திலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். அருகில் உள்ள செந்தியம்பலம் கிராமத்தைச் சேர்ந்த நம்மாழ்வார் என்பவர் போப் உடன் நட்பாகி ஞான சிகாமணி என்று தன் பெயரை மாற்றி கிறித்துவரானார். அதனால் ஒரு துவக்க பள்ளிக்கு அவர் பெயரைச் சூடினார் போப். தமிழ் தவிர தெலுங்கு, மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.

1849-ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்ட போப் பின் இங்கிலாந்து சென்றார்.

# ஜி.யு.போப்–ஜியார்ஜ் யூக்ளோ

(24 ஏப்ரல் 1820 - 11 பெப்ரவரி 1908 (அகவை 87)

(கட்டுரை)

## தஞ்சாவூரில்

1851 ஆம் ஆண்டு தன் மனைவியுடன் தமிழகம் திரும்பினார். எட்டு ஆண்டுகள் தஞ்சாவூரில் சமயப்பணியைத் தொடர்ந்தார். இந்தக் கால கட்டத்தில் புறநானூறு, நன்னூல், திருவாசகம், நாலடியார் போன்ற நூல்களைக் கற்றார். சில ஆங்கில மொழி இதழ்களில் தமிழ் குறித்த ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார்.

போப்பின் தஞ்சாவூர் பணி சமயப்பணி, கல்விப்பணி, தமிழ்ப்பணி என முப்பரிமாணம் கொண்டது.

## உதகமண்டலத்தில்

தஞ்சையில் கிறித்துவத்திற்கு மதம் மாறிய பின்னர்ச் சாதி உயர்வு தாழ்வுகளை மறக்காத உயர் சமூகத்தைச் சேர்ந்தோராகக் கருதப்பட்டோர் தங்களுக்கு முதலிடம் கேட்டனர். போப் இறைவன் முன்னிலையில் அனைவரும் சமம் என்றார். அவரது கருத்து முதலிடம் கேட்டோரால் ஏற்கப்படவில்லை. கிறித்துவ சபையான நற்செய்திக் கழகத்தாரும் உயர் சமூகத்தைச் சேர்ந்தோராகக் கருதப்பட்டவர்களைச் சார்ந்து நின்றதால், போப் தமது 16 வருட நற்செய்திக் கழகத் தொண்டர் பணியிலிருந்து விலகி கிறித்துவ சங்கங்களின் சார்பின்றி அவர்களது பொருள் உதவியின்றித் தனிப்பட்ட முறையில் சமயப் பணியாற்றும் நோக்குடன், போதிய பொருளின்றித் தஞ்சையிலிருந்து மனைவி மற்றும் ஐந்து மக்களுடன் மாட்டு வண்டியில் ஏறி 24 நாட்கள் பயணம் செய்து உதகமண்டலம் சென்றார். உதகையில் அவரது பணிக்காக இங்கிலாந்தின் கந்தர் புரி அத்தியட்சர் 'மறை நூற் புலவர்' எனும் பட்டம் அளித்தார்.

# ஜி.யு.போப்-ஜியார்ஜ் யூக்ளோ

(24 ஏப்ரல் 1820 - 11 பெப்ரவரி 1908 (அகவை 87)

(கட்டுரை)

## தமிழ்த் தொண்டுகள்

இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார். 1886-ஆம் ஆண்டு திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார். புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களைப் பதிப்பித்தார். தமிழ் மீது பெரும் பற்று பெற்ற அவர் நாலடியார், திருவாசகம் ஆகியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.

## மூன்று இறுதி விருப்பங்கள்

முதுமையில் தளர்ச்சியடைந்த சமயம் தமது நண்பரிடம் மூன்று விருப்பங்களைத் தெரிவித்திருந்தார் ஜி.யு.போப்.

** இறப்புக்குப் பின் தனது கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்ற வாசகம் இடம்பெற வேண்டும். (அவரது உயிலிலோ அவரது கல்லறையிலோ அத்தகைய கருத்து சேர்க்கப்படவில்லை).

** தமது கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறுபகுதியாவது தமிழ் மக்களின் நன்கொடையால் அமைய வேண்டும். பச்சையப்பன் கல்லூரித் தமிழ் பேராசிரியர் செல்வக் கேசவராயர் தமிழன்பர்களிடம் நன்கொடை திரட்டி இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார்.

** கல்லறையில் தம்மை அடக்கம் செய்யும் போது தான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறள் மற்றும் திருவாசகத்தையும் உடன் வைக்க வேண்டும் என்பது.

# ஜி.யு.போப்–ஜியார்ஜ் யூக்ளோ

(24 ஏப்ரல் 1820 - 11 பெப்ரவரி 1908 (அகவை 87)

(கட்டுரை)

எழுதிய நூல்கள்

* First Catechism of Tamil Grammar for Schools.
* Second Catechism of Tamil Grammar for Schools.
* Third and complete Grammar of the - Tamil Language in both its dialects, with the native authorities.
* Grammar of the Tulu Language.
* Tamil - English.and English - Tamil Lexicon
* Tirukkural — English Translation.
* Naladiyar — English Translation.
* Tiruvasagam — English Translation.
* Select Stanzas from Purananuru, Purapporul Venba Malai etc.translated into English. (Contributed to the journal of the Royal Asiatic Society and the Siddantha Deepika.)



கவிஞர் அ.வில்சன்,இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
பலவீனமானவர்கள்
வாய்ப்புகளுக்காக காத்திருக்கின்றனர்..
பலமானவர்கள்
வாய்ப்புகளை உருவாக்குகிறார்கள்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே!  முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com